# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.290/மா/2023
நாள்.20.12.2023

திருமதி. M.புனிதா சம்பத்,
காஞ்சிபுரம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், மாகாளியம்மன் கோவில் தெரு, கதவு எண். 35/16 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. புனிதா சம்பத் என்பவரின் 04.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2023 அன்று பெறப்பட்டு, 290/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், மாகாளியம்மன் கோவில் தெரு, கதவு எண் 35/16 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. புனிதா சம்பத் என்பவரின் 04.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" காஞ்சிபுரம் மாநகராட்சி 23வது வார்டின் மாமன்ற உறுப்பினர் என்ற வகையில் அடிப்படை தேவைகள் மற்றும் வார்டு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மேலும் வார்டின் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தான கோரிக்கை மனுக்களுடன் காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. M.மகாலட்சுமி அவர்களை பலமுறை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை அவரிடம் அளித்து எனது கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் இந்த கோரிக்கைகளை செயல்படுத்த மன்ற பொருள் கொண்டு வந்து அவற்றை மாமன்ற கூட்டத்தில் தீர்மானமாகவும் நிறைவேற்றி தருமாறும் பலமுறை கோரிக்கை அளித்திருந்தேன். மேலும் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட

வார்டு சபாக்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் அவரிடம் அளித்து அதன் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி இருந்தேன். ஆனால் மேற்கண்ட எந்த கோரிக்கையும் அவர் பொருட்படுத்தாமல் நான் வைத்த கோரிக்கைகள் எதையும் மேயர் அவர்கள் நிறைவேற்றவில்லை. மேலும் மாநகராட்சியின் பொது சுகாதார குழு உறுப்பினராக உள்ள நான் அது தொடர்பான கோரிக்கைகள் மற்றும் புகார்களோடு மேயரை எப்போது சந்திக்க சென்றாலும் அவருடன் அவரது கணவர் திரு.யுவராஜ், மேயரின் மைத்துனர் பழனி மற்றும் மேயரின் கணவரின் நண்பர்களும் மேயரின் அறையில் அமர்ந்து கொண்டு நான் கேட்கும் எந்த கோரிக்கை குறித்தும் பேசவிடாமல் எதிர்கட்சி வார்டுகளுக்கு எல்லாம் என்ன பணி செய்ய வேண்டும் எதை செய்யக்கூடாது என்று எங்களுக்கு தெரியும் என்றும் மனு கொடுத்தீங்களா கிளம்புங்க நாங்க பார்த்துக்கொள்கிறோம் என கூறி என்னை பேச விடாமல் மேயரும் அவரை சார்ந்தவர்களும் அனுப்பி விடுகின்றனர். மேலும் இது சம்மந்தமாக மாதந்தோறும் நடைபெறும் மாநகராட்சியின் கூட்டத்தில் நான் கலந்து கொண்டு எனது கோரிக்கையை முன் வைக்கும்போது எல்லாம் மேயர் மகாலட்சுமி அவர்களின் தூண்டுதலின் பேரில் மாநகராட்சியின் பணிக்குழு தலைவரும் 30வது வார்டு உறுப்பினருமான திரு.ப.சுதேஷ் என்பவரும் மற்றும் மாநகராட்சியின் 2வது மண்டல தலைவரும் 25வது வார்டு உறுப்பினருமான திரு. S.சந்துரு என்பவரும் என்னை பேசவிடாமல் ஒருமையில் பேசி எனது கோரிக்கைகளை கேட்க விடாமல் தடுத்து நிறுத்துகின்றனர். இதனால் ஒவ்வொரு முறையும் நான் பாதிக்கப்பட்டு வருகிறேன்.

மேயர் எனது கோரிக்கைகளை நிறைவேற்ற முன் வராத காரணத்தினால் அடுத்தகட்ட நடவடிக்கையாக மாநகராட்சி ஆணையாளரை சந்தித்து எனது கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி மனுக்கள் அளித்தேன். அவரும் எனது நியாயமான கோரிக்கைகளை கண்டும் அவற்றை ஏற்றும் கோரிக்கைகளை நிறைவேற்ற முன் வரும்போது எல்லாம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி அவர்களும் பணிக்குழு தலைவர் சுரேஷ் அவர்களும் இணைந்து எங்களை கேட்காமல் நீங்கள் எந்த பணிகளையும் 23வது வார்டுக்கு செய்து தரக்கூடாது என்று கூறி எனது வார்டின் தேவைகளை நிறைவேற்ற விடாமல் ஆணையாளரை தடுத்து நிறுத்துகின்றனர். மேயர் மகாலட்சுமியின் இந்த செயலால் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மாநகராட்சியின் மற்ற வார்டுகளை காட்டிலும் மிகவும் பின்தங்கியும் அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருந்து வருகிறது. என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு என்னால் எதையும் செய்து தர முடியவில்லை. எதிர்க்கட்சி வார்டு மாமன்ற உறுப்பினர் நான் என்பதால் என்னை பழி வாங்குவதாக நினைத்துக்கொண்டு என்னை நம்பி வாக்களித்த மக்களை பழி வாங்குவதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எனவே மேற்கண்ட எனது இந்த முறையீட்டு மனு மீது விசாரணை செய்து காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. மகாலட்சுமி மீது தக்க நடவடிக்கை எடுத்தும் இணைப்பில் காணும் நான் வைத்த எனது வார்டு கோரிக்கைகளையும் நிறைவேற்ற உத்தரவிடக்கோரியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 22.11.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் தனது 21.11.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

" நான் காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. M. மகாலட்சுமி அவர்களின் ஒருதலைபட்சமான செயல்கள் தொடர்பாக கடந்த 04.092023 அன்று இந்த முறைமன்ற நடுவர் மன்றத்தில் முறையீட்டு மனுவாக பதிவு செய்து இருந்தேன். அந்த மனுவானது 290/மா/2023 என்ற எண்ணிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கடந்த 09.10.2023 தங்கள் அலுவலக கடிதத்தின் வாயிலாக தகவல் கிடைக்கப்பெற்றேன். அதனை தொடர்ந்து கடந்த 17.11.2023 தங்கள் அலுவலகத்தில் இருந்து தொலைபேசி வாயிலாக என்னை அழைத்து எதிர்வரும் 22.11.2023 அன்று என் முறையீட்டு மனு மீது நேரடி விசாரணை உள்ளதாகவும் அதற்கான அழைப்பாணையை மின்னஞ்சலில் அனுப்புவதாகவும் கூறி எனது மின்னஞ்சல் முகவரியை பெற்று அதில் அழைப்பாணையை அனுப்பி வைத்தார்கள். அதில் எதிர் மனுதாரராக ஆணையர் காஞ்சிபுரம் மாநகராட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் புகார் அளித்தது மேயர் மகாலட்சுமி மீதே தவிர ஆணையர் மீது அல்ல. இது தொடர்பாக தங்கள் அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது அலுவலர்களை மட்டுமே விசாரிப்போம் என்றும் மேயரை விசாரிக்க மாட்டோம் என தெரிவித்தனர். இந்த நிலையிலேயே எனது முறையீட்டு மனு மீதான முடிவை நான் உணர்ந்து விட்டேன். உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவம் என்பது உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றிக்கொண்டிருக்கும் பொதுப்பணியாளர்களால் தொடர்புடைய சட்டத்தின் வகை முறைக்கிணங்க நிர்வாக செயல்பணிகளை செய்து முடிக்கையில் செய்யப்படும் ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகம் அல்லது முறைகேடுகள் எதன் பேரிலுமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

"பொதுப்பணியாளர்" என்றால் தலைமையர் அல்லது துணைத்தலைமையர், மேயர் அல்லது துணை மேயர் உள்ளடங்கலாக உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் மற்றும் உள்ளாட்சி அமைப்பின்கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை உள்ளடக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறை வேறாக உள்ளது. எனவே எனது மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாது என்று நான் உணர்ந்த காரணத்தால் தாங்கள் அலுவலகத்திற்கு நேரடி விசாரணைக்கு வர இயலாது என தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் நீதியின் மீது நான் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாக இறுதி முயற்சியாக 04.09.2023 அன்று அளித்த முறையீட்டு மனுவில் நான் குறிப்பிட்ட புகார் மற்றும் கோரிக்கைகளையே எனது எழுத்துப்பூர்வ வாதமாக எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன். நான் இந்த முறையீட்டு மனுவினை பதிவு செய்த பிறகு எனது வார்டில் யதோத்தகாரி சன்னதி தெரு, யதோத்தகாரி மாட வீதி, திருப்புக்கூடல் தெரு ஆகிய பகுதிகளுக்கு மட்டும் அவசரகதியில் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது தவிர வேறு எந்த பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை" என தெரிவித்துள்ளார்.

5) காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 21.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

" திருமதி. M.புனிதா 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் அளிக்கப்படும் கோரிக்கை மனுக்கள் மட்டுமல்லாமல் 51 வார்டுகளிலும் உள்ள மாமன்ற உறுப்பினர்களிடம் இருந்து மேயர் அவர்களிடம் அளிக்கப்படும் கோரிக்கை மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு, அந்த மனுக்களை மேயர் அவர்களால் பரிந்துரை செய்து அனுப்பப்படுகிறது.

அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் மனுக்கள் மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை, மற்றும் சில அவசர பணியின் அத்தியாவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்கள் என அந்தந்த பிரிவு தலைமை அலுவலர்களால் அவ்வப்போது தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாமன்ற கூட்டத்திலும் 51 வார்டுகளிலும் உள்ள மாமன்ற உறுப்பினர்களால் அளிக்கப்படும் கடிதங்களின் மீது அந்தந்த வார்டுகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் இன்னபிற பணிகளுக்கு நிதியாதாரங்களுக்கு ஏற்ப பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து மாமன்றத்தில் அனுமதி பெற்று உடனடி நடவடிக்கைகள் கட்சி பாகுபாடின்றி மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேயரின் அறையில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் எந்த நேரத்திலும் சந்தித்தும் வருகின்றனர். யாரிடமும் பாகுபாடின்றி கட்சி பேதமின்றி மாநகராட்சிப் பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாமன்ற கூட்டத்தின் போதும் கேள்வி நேரம் ஒதுக்கப்படுகிறது. அது சமயத்தில் மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியின் நிறைகுறைகளையும் பகிர்ந்து கொள்ள, மாமன்றத்தில் போதிய கால அவகாசம் அளிக்கப்படுகிறது. மாநகராட்சி ஆணையர் அவர்களை மேயர் சந்தித்து 23–வது வார்டுக்கு பணிகள் ஏதும் செய்ய விடாமல் தடுத்து நிறுத்துவதாக தெரிவிப்பது உண்மைக்கு புறம்பானதாகும். மேலும் இனிவரும் காலங்களில் எந்த நேரத்திலும் 23–வது வார்டில் தேவையான பணிகளின் விவரங்களை விவரமாக தனித்தனி கடிதம் மூலமாக மாமன்ற உறுப்பினர் திருமதி.M. புனிதா அவர்கள் மேயரை சந்தித்து மனுவாக கொடுக்கும் பட்சத்தில் அடுத்தடுத்து வேண்டிய பணிகளை நிதியாதாரத்தை பொறுத்து மாமன்றத்தின் அனுமதியுடன் செய்து கொடுக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 23–வது வார்டில் மாமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்டு செயல்பட துவங்கியதிலிருந்து நாளது தேதி வரையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து திட்டப்பணிகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

<u>2022–23 & 2023–24ம் ஆண்டில் 23–வது வார்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பொதுநிதி மற்றும் திட்டப்பணிகளின் விவரம்.</u>

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்தப் புள்ளி நாள் |
|---|---|---|---|
| | பொது நிதி | | |
| 1. | வார்டு எண்.23, எரிக்கரை கன்னிக்கோயில் தெருவில் RCC கல்வெர்ட் அமைத்தல் பணி | 4.00 | 15.09.2022 |
| 2. | வார்டு எண்.23, வரதராஜபுரம் பின் தெருவில் புதியதாக கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி | 2.50 | 26.05.2023 |
| 3. | காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1ல் வார்டு எண்.19 முதல் 30 வரை மற்றும் 34 ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை தார் பேட்ச் கொண்டு செப்பனிடும் பணி | 9.80 | 02.08.2023 |

| | | | |
|---|---|---|---|
| 4. | வார்டு எண்.23, நேதாஜி தெருவிற்கு பாதாளச்சாக்கடை பைப் பழுதினை அகற்றி பேவர் பிளாக் சாலை அமைத்திடும் பணி | 5.00 | 17.08.2023 |
| 5. | வார்டு எண்.19 முதல் 30 மற்றும் 34 வரை தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை மின் மோட்டார் கொண்டு அகற்றுதல், | 3.00 | 08.09.2023 |
| 6. | வார்டு எண்.19 முதல் 30 மற்றும் 34 வரை தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை அகற்ற JCB இயந்திரம் வாடகை அடிப்படையில் மேற்கொள்ளுதல் பணி | 4.00 | 08.09.2023 |
| 7. | வார்டு எண்.23, யதோத்தகாரி குளத்திற்கு மழைநீர் செல்ல மழைநீர் சேகரிப்பு மையம் அமைத்திடும் பணி | 0.7 | 30.11.2023 |
| 8. | வார்டு எண்.23, யதோத்தகாரி பள்ளி கழிவறை, சுற்றுசுவர், பேவர் பிளாக் அமைத்தல் பணி | 3.50 | 10.10.2023 |
| 9. | வார்டு எண்.23, யதோத்தகாரி மேல்நிலை நீர்தேக்க தொட்டியினை பழுது பார்த்தல் பணி | 5.00 | 10.10.2023 |
| 10. | வார்டு எண்.23, வரதராஜபுரம் தெரு, வரதராஜபுரம் பின் தெரு, கன்னிகோவில் தெரு ஆகிய பகுதிகளுக்கு சின்டெக்ஸ் டேங்க் மேடை மற்றும் பழுது பார்த்தல் பணி மேற்கொள்ளுதல் | 5.00 | 10.102.2023 |
| | திட்டப்பணி | | |
| 1. | 6th. SFC – Road work 2023-24<br>Providing damaged to BT surface at Arundhathi palayam 1st. street (008021R539) Ward No.21, Yathothakari South Mada Street (008023R629) Ward No.23, Vegavathi road (008028R691) Ward No.28 Zone II in Kancheepuram Corporation | 29.80 | 18.08.2023 |
| 2. | Nagarpura Salai Mempattu Thittam 2022-23<br>Relaying of Road Yathothakari Sannadhi street, 008/023/R/3775-Thirupukudal Street, 008/025/S/0769 (Package II) | 13.50 | 24.05.2023 |

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் 21.12.2023 நாளிட்ட கடிதம், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் திருமதி.M.புனிதா சம்பத் தான் காஞ்சிபுரம் மாநகராட்சியின் 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் எனவும் 23வது வார்டின் தேவைகளை நிறைவேற்ற விடாமல் ஆணையாளரை தடுத்து வருகின்றனர் எனவும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மாநகராட்சியின் மற்ற வார்டுகளை காட்டிலும் தனது வார்டு மிகவும் பின்தங்கி அடிப்படை வசதிகள் இல்லாமல் இருந்து வருகிறது எனவும் தனது முறையீட்டு மனு மீது விசாரணை செய்து காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

திருமதி. M.புனிதா 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் அளிக்கப்படும் கோரிக்கை மனுக்கள் மட்டுமல்லாமல் 51 வார்டுகளிலும் உள்ள மாமன்ற உறுப்பினர்களிடம் இருந்து மேயர் அவர்களிடம் அளிக்கப்படும் கோரிக்கை மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு, அந்த மனுக்களை மேயர் அவர்களால் பரிந்துரை செய்து அனுப்பப்படுகிறது. அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் மனுக்கள் மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை, மற்றும் சில அவசர பணியின் அத்தியாவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று உடனே நடவடிக்கை எடுக்கப்பட

வேண்டிய மனுக்கள் என அந்தந்த பிரிவு தலைமை அலுவலர்களால் அவ்வப்போது தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாமன்ற கூட்டத்திலும் 51 வார்டுகளிலும் உள்ள மாமன்ற உறுப்பினர்களால் அளிக்கப்படும் கடிதங்களின் மீது அந்தந்த வார்டுகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் இன்னபிற பணிகளுக்கு நிதியாதாரங்களுக்கு ஏற்ப பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து மாமன்றத்தில் அனுமதி பெற்று உடனடி நடவடிக்கைகள் கட்சி பாகுபாடின்றி மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது எனவும் மேயரின் அறையில் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் எந்த நேரத்திலும் சந்தித்தும் வருகின்றனர். யாரிடமும் பாகுபாடின்றி கட்சி பேதமின்றி மாநகராட்சிப் பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மாமன்ற கூட்டத்தின் போதும் கேள்வி நேரம் ஒதுக்கப்படுகிறது. அது சமயத்தில் மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியின் நிறைகுறைகளையும் பகிர்ந்துக்கொள்ள, மாமன்றத்தில் போதிய கால அவகாசம் அளிக்கப்படுகிறது. மாநகராட்சி ஆணையர் அவர்களை மேயர் சந்தித்து 23–வது வார்டுக்கு பணிகள் ஏதும் செய்ய விடாமல் தடுத்து நிறுத்துவதாக தெரிவிப்பது உண்மைக்கு புறம்பானதாகும் என்றும் 23–வது வார்டில் மாமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்டு செயல்பட துவங்கியதிலிருந்து நாளது தேதி வரையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து திட்டப்பணிகள் குறித்த விவரத்தையும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் மற்றும் விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக

பிரிவு 7. முறைமன்ற நடுவர் பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது எதனையும் செய்ய வேண்டும் அதாவது, –

(i) பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது என, அரசிடமிருந்து பெறப்பட்ட அல்லது முறைமன்ற நடுவரிடம் வந்திருக்கிற எழுத்து வடிவிலான முறையீடு எதனையும் விசாரணை செய்தல்;

(ii) நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில், பின்வரும் முறையில் ஆணையொன்றினைப் பிறப்பித்தல், அதாவது:-

(a) பொதுப்பணியாளர் ஒருவரால் செய்யப்பட்டுள்ள முறைகேடு, குற்றவியல் குற்றமாக இருக்கிறவிடத்து, அந்தப் பொருட்பாடு உரிய புலனாய்வு அமைப்பிற்கு தக்க நடவடிக்கைக்காக சுட்டியனுப்பப்படுதல் வேண்டும்;

(b) உள்ளாட்சி அமைப்பின் நிதியத்திற்கு இழப்பினை ஏற்படுத்தியிருக்கின்ற முறைகேடாக இருக்கின்றவிடத்து, அத்தகைய முறைகேடுகளுக்கு பொறுப்பானவர்களிடமிருந்து அத்தகைய இழப்பை திரும்பப்பெறுவதற்கு ஆணையிட வேண்டும்;

(c) உள்ளாட்சி அமைப்பொன்றின் அலுவலர் அல்லது பணியாளர் எவரின் கடமையும் வேண்டுமென்றே செய்த கவனமின்மையால் அல்லது மோசமாக செய்ததன் பொருட்டு

முறைகேடு நடந்திருக்கின்றவிடத்து தொடர்புடைய விதிகளின்கீழ் உரிய அதிகார அமைப்பால் துறை நடவடிக்கை எடுப்பதற்காக பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

பிரிவு 8.(i) முறைமன்ற நடுவர், விசாரணை எதனின் நோக்கத்திற்காக, 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி உரிமை வழக்கு ஒன்றினை விசாரணை செய்யும் உரிமையியல் நீதிமன்றமொன்றின் மற்றும், குறிப்பாக, பின்வரும் பொருட்பாடுகள் தொடர்பாக, அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருப்பார், அதாவது:-

(a) முறையீட்டாளரை அல்லது சாட்சி அளிப்பவர்களை வருகை தருமாறு அழைப்பதற்கு மற்றும் கட்டாயப்படுத்துவதற்கு மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரிப்பதற்கு;

(b) தொடர்புடைய மற்றும் தேவைப்படும் ஆவணம் எதனையும் கண்டுபிடிப்பதற்கு மற்றும் முன்னிலைப்படுத்துமாறு கேட்பதற்கு;

(c ) உறுதி ஆவணங்களின் பேரில் சான்றினைப் பெறுவதற்கு;

(d) பொதுப்பதிவுரு எதனையும், அல்லது அதனின் நகலை நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் கேட்டுப்பெறுவதற்கு;

(e) சாட்சி அளிப்பவரை மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக பணிப்பாணையை வழங்குதல்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படலாகிறவாறான பொருட்பாடு எதுவும்.

x x x x x x x x x

x x x x x x x x x

மேற்சொன்ன பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி முறைமன்ற நடுவரானவர் விசாரணைக்கு அழைக்கப்பட வேண்டிய நபரை தீர்மானித்து அவருக்கான அழைப்பாணைகள் அனுப்பப்படும். இந்நேர்வில் இம்முறைமன்ற விசாரணை அழைப்பாணையின்படி மனுதாரரை 22.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி தெரிவிக்கப்பட்டது. ஆனால் மனுதாரர் நேரிடையாக இம்முறைமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு வாதங்களையும் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களையும் சமர்ப்பிக்காமல் தான் புகார் அளித்தது மேயர் மகாலட்சுமி மீதுதான் தவிர ஆணையர் மீது அல்ல என்று தெரிவித்திருப்பது இம்முறைமன்ற அழைப்பாணையை மீறும் செயலாக உள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இவ்வாறு தான் அளித்துள்ள புகார் குறித்து ஆஜராகி விளக்கங்களை தெரிவிக்காமல் தானாகவே கற்பனையாய் ஒரு முடிவெடுத்து இம்முறைமன்ற நடுவத்திற்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கும் இந்த செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள 23-வது வார்டு தொடர்பாக கட்சி பாகுபாடின்றி செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் மனுவின் மீது நடவடிக்கைகளை தொடர்வதற்கு தேவையான ஆதாரங்களை நேரில்

ஆஜராகி சமர்ப்பிக்காததால் அவரது புகார் மனுவினை நிராகரித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. M. புனிதா சம்பத்,
35/16, மாகாளியம்மன் தெரு,
காஞ்சிபுரம் – 631 501.

2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்